எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப்படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்

அஜந்தா
போட்டோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பக்கங்கள்: நான்கு

Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்களகரமான நிகழ்ச்சிகளை
திங்களெனத் துலங்கிட
வீடியோ படம்பிடித்திட

அஜந்தா
வீடியோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 09 செவ்வாய்க்கிழமை (21 – 02– 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 89

## சமாதான முயற்சியில் புலிகள்தரப்பு உறுதி!

### வவுனியாவில் வாசு குழு தகவல்

கொழும்பு, பெப். 21

"விடுதலைப் புலிகள் உண்மையாகவே சமாதானத்தை விரும்புகின்றனர். சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர். புலிகள் சமாதானத்தை விரும்புகின்றனர் என்பதில் எமக்கு நூற்றுக்கு நூறு வீதம் நம்பிக்கை உண்டு."

—இவ்வாறு யாழ். வந்து திரும்பிய தென்பகுதி சமாதானத் தூதுக்குழுவினர் வவுனியாவில் வைத்து தகவல் வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய வாசுதேவ நாணயக்கார தலைமையிலான குழுவை விடுதலைப் புலிகள் நொச்சிமோட்டையில் வைத்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் குட்டி, சுதா ஆகியோர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலும் படம் பிடித்த தமிழர் கைது!

கொழும்பு, பெப். 21

திருகோணமலைப் பொலீஸ் நிலையம் மற்றும் திருகோணமலைக் கோட்டையில் உள்ள சில இடங்கள் ஆகியவற்றை படமெடுத்த தமிழ் இளைஞர் ஒருவரை பொலீஸார் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த இளைஞர் தற்சமயம் பம்பலப்பிட்டியில் வசித்து வந்தார் என பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலும் சில இடங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலைக்கு முன்னரே பேச்சுக்கள் பூர்த்தி!

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 21

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தும் சமாதானப் பேச்சுக்கள் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் பூர்த்தியடைந்துவிடும் என நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

புதிய அரசமைப்பு ஜூலை மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்—

அந்த அரசமைப்பில் அதிகாரப் பரவலாக்கல் ஒரு பகுதியாக உள்ளடக்கப் பட்டிருக்கும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை —

அரசமைப்பு மாற்றத்திற்கு முன்னரே யுத்தம் முடிவுற்று சமாதானம் ஏற்படும் என ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் நம்பிக்கை வெளியிட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தாராளமாக பொருள்களை வடக்கே அனுப்பி சமாதான நடவடிக்கையை விரைவுபடுத்துக!

## கொழும்பு திரும்பிய சமாதானக்குழு ஸ்ரீலங்கா அரசுக்கு வற்புறுத்து

கொழும்பு, பெப்ரவரி 21

"வடபகுதிக்கான பொருள்களை தாமதமின்றி விரைவாக — தாராளமாக — அனுப்பி, அங்கு இயல்பு வாழ்க்கை நிலையை உடனடியாகத் தோற்றுவித்து, சமாதான நடவடிக்கைகளை விரைவுபடுத்த உடன்நடவடிக்கை எடுங்கள்!"

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய தென்பகுதி சமாதானக்குழு, கொழும்பில் ஸ்ரீலங்கா அரசை இவ்வாறு வற்புறுத்தியிருப்பதாக பி.பி.ஸி. அறிவித்தது.

வாசுதேவ நாணயக்கார தலைமையிலான சமாதானக் குழு யாழ். சென்று திரும்பிய பின்னர், கொழும்பில் வைத்து வெளியிட்ட தகவல்களை பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

★ பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதாக அரசு அறிவித்தது. ஆனால் இப்போதும் கூட போதியளவு உணவு, மருந்து வகைகள் யாழ்ப்பாணத்தைச் சென்றடையவில்லை.

★ சமஷ்டி அடிப்படையிலான — நீதியான — தீர்வு முன்வைக்கப்படுமானால் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றார்கள் என்பதை உணரக் கூடியதாக இருந்தது.

★ மக்களின் அன்றாட

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நீதிமன்றத்துக்கு பின்னால் வெடிகுண்டு!

### பாதுகாப்பாக அகற்றப்பட்டது

கொழும்பு, பெப். 21

கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றக் கட்டடத்தில், நீதிமன்றப் பதிவாளர் அலுவலகத்தின் பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்றைப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இராணுவத்தின் வெடிகுண்டை செயலிழக்கச் செய்யும் பிரிவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பிரிவினர் உடனே அந்த இடத்துக்கு விரைந்து சென்று அக்குண்டை பாதுகாப்பாக அகற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்டு எடுக்கப்பட்ட அக்குண்டு அந்த இடத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகப் புலன்விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

(அ-எ)

## சந்திரிகாவை கொல்லும் திட்டம் புலிகளுக்கு இல்லை

### பாலசிங்கம் கூறியதாக அறிவிப்பு

கொழும்பு, பெப். 21

ஜனாதிபதி சந்திரிகாவைக் கொலை செய்ய புலிகள் எண்ணியிருப்பதாக எழுந்திருக்கும் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்துள்ளன.

யாழ். வந்திருந்த தென்பகுதி சமாதானக் குழுவினரிடம் — குறிப்பாக — அவர்களுடன் வந்திருந்த பத்திரிகையாளரிடம் புலிகளின் மறுப்பை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கடந்த சனியன்று தெரிவித்ததாக அச்செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

"சிங்கள இன அரசியல் தலைவர்களை படுகொலை செய்வது எமது இயக்கத்தின் நோக்கமல்ல.

"சந்திரிகாவின் கைகள் புனிதமானவை; அவர் இதய சுத்தமானவர்; தமிழர் பிரச்சினையை நன்கு புரிந்து கொண்டிருப்பவர்; இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற அவாவுடையவர். இத்தகைய நிலையில் சந்திரிகாவை கொல்ல வேண்டியதன் அவசியம் என்ன?" — என்று பாலசிங்கம் கேள்வி எழுப்பியதாகசெய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

[உ-4-6]

### யாழ். கல்வித் திணைக்களத்துக்கு

## இலவச பாடநூல், ஒட்டோ கப்பலில் வந்து சேர்ந்தன

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பலில் 2 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய், பாடசாலை மாணவருக்கான இலவச பாடநூல்கள், யாழ். கல்வித் திணைக்களத்துக்கு ஓர் ஓட்டோ என்பன எடுத்துவரப்பட்டுள்ளன.

பொருள்களை இறக்கும் பணி நாளை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் பெப்ரவரி மாதத்துக்கான பென்சன் வவுச்சர்களும் எடுத்து வரப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. (உ-4)

## மோட்டார் சைக்கிள் விலை கணிசமான அளவு வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 21

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் மோட்டார் சைக்கிள்களுக்கான இறக்குமதி வரி பத்து வீதத்தினால் குறைக்கப்பட்டதை அடுத்து மோட்டார் சைக்கிள்களின் விலை கணிசமான அளவில் குறைந்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அகில இலங்கை மோட்டார்சைக்கிள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் சமதபால ஜெயவர்த்தனவும் இத்தகவலை ஊர்ஜிதம் செய்தார்.

சி 70 ரக மோட்டார் சைக்கிள் 3 ஆயிரத்து 500 ரூபாவினாலும் எம். டீ. 90 ரக மோட்டார் சைக்கிள் 4 ஆயிரத்து 500ரூபாவினாலும், சி. டீ. 125 ரக மோட்டார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குறுதிகளை நிறைவேற்றாமையே தற்போதைய பிரச்சினைக்கு காரணம்

### பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தமிழ்ச்செல்வன்

லண்டன், பெப். 21

இன்று மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் அவலங்கள் பிரச்சினைகள் இராணுவத்தோடு சம்பந்தப்பட்டவை.

அதனால் அரசதூதுக்குழு இங்கு பேசி வாக்குறுதி அளித்துவிட்டுச் சென்றாலும் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது.

இதுவே இன்றைய பேச்சின் மந்த நிலைக்குக் காரணம்.

—இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்.

பி. பி. ஸி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தமது பேட்டியில் தெரிவித்த ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ நாம் புதிது புதிதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.ஆர்., டி.பி., ஹேமா மூவருக்கும் வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைப்பு!

கொழும்பு, பெப். 21

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, டி. பி. விஜேதுங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவியான ஹேமா பிரேமதாஸா ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை பாதுகாப்பு அமைச்சு குறைத்திருக்கிறது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா, டி. பி விஜேதுங்கா ஆகியோரின் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை எழுபதிலிருந்து முப்பதாகவும், ஹேமா பிரேமதாஸாவின் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை அறுபதிலிருந்து பத்தாகவும் குறைக்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



## நீதிபதியிடம் கைவரிசை!

கொழும்பு, பெப் 21

மேல்மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரிடம் "பிக்பொக்கட்காரர்கள்" இருவர் கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்றும்—

இச்சம்பவம் தொடர்பாக புறக்கோட்டைப் பொலீஸார் இரு சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் அபகரிக்கப்பட்ட பணத்தையும் மீட்டுள்ளனர் என்றும் [illegible] ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

(உ-4)

## எழுதுவினைஞர் பரீட்சை,

யாழ்ப்பாணம், பெப். 21

தமிழீழ நிர்வாக சேவையின் பொது எழுதுவினைஞர் சேவை போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

(உ-4)

## சுவிஸில் ஈழத் தமிழர்கள் நடத்தும் எதிர்ப்பு ஊர்வலம்

கொழும்பு, பெப். 21

தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகளை வெளியேற்ற சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளதை எதிர்த்து சுவிஸில் உள்ள ஈழத்தமிழர்கள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பேர்ன் நகர ரயில் நிலையத்தின் முன்னால் இந்த ஊர்வலம் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டு வருகிறது.

"தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம்" என்று இந்த ஊர்வலத்தில் கோஷம் எழுப்பப்படவுள்ளது.

சுவிட்ஸர்லாந்து தமிழ்ச் சங்கம், மேகல் தமிழ் ஆதரவாளர்கள் அமைப்பு, இடதுசாரி அமைப்பு ஆகியவை இணைந்து இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்துள்ளன.

(உ-9)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு ஐ.நா. டாக்டர்கள் எழுவர்

கொழும்பு, பெப். 21

ஐக்கிய நாடுகள் சபையின் ஏழு டாக்டர்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைப் பிரதிநிதி றொபர்ட் இங்கிலண்ட் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கென 4,000 கோடி ரூபாவை இலங்கை அரசு செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது. இதற்கு தேவையான உதவிகளை வழங்க ஐக்கியநாடுகள் சபை தயாராக உள்ளதாகவும் —

ஐ. நாவின் அபிவிருத்தி வேலை திட்டங்களின் கீழ் தொழில்நுட்ப. ஆலோசனை கண்காணிப்பு உதவிகளையும் வழங்க தாங்கள் தயாராயிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(உ-9)

### அரசின் போக்கை கண்டித்து

## கிளிநொச்சி, நெடுங்கேணி வவுனியாவிலும் பேரணி

யாழ்ப்பாணம், பெப். 21

தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் சிறீலங்கா அரசு கடைப்பிடிக்கும் அசமந்தப் போக்கை கண்டிக்கும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் வடதமிழீழத்தில் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன

கடந்த சனிக்கிழமை நெடுங்கேணியிலும் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலும் நேற்று வவுனியாவிலும் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டன.

சனியன்று முல்லைத்தீவு நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் முடிவடைந்தது.

கிளிநொச்சியில் கடந்த ஞாயிறன்று—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டிசம்பர் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 21

இடம் பெயர்ந்தவர்களுக்கான டிசம்பர் மாதத்தின் நான்கு வாரங்களுக்குமான உலர் உணவுப் பொருள்கள் யாழ். செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இம்முறை ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரிசி, சீனி, மைசூர்ப்பருப்பு, கடலை, தேயிலை, லக்ஸ்பிறே என்பனவும் —

நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மேலதிகமாக ஹைலண்ட் பால்மாவும் வழங்கப்படவுள்ளன.

டிசம்பர் மாதத்திற்கான இந்த உலர் உணவுப் பொருள்களை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னதாக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகித்து முடிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது

(உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனையாகிறது

கும்பகர்ணன் வதைப்படலம் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முதற்கலைத் தேர்வு G. A. Q. பாலபண்டித மாணவர்களுக்கு ஒரு பாடநூல் எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். மகிமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். (சி-384)

## ஆண்டு - 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான கட்டுரைப் புத்தகம் விற்பனையாகிறது. பெற்றுக் கொள்ளும் இடம்: அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-379)

## தேவை

நல்ல நிலையில் உள்ள அலுமாரி விலைக்குத் தேவை. றோ ஜர், இல.23/3, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். [35294]

## இலகு திருமண சேவை

30 வயது. உத்தரம் 1, செவ்வாய் 4. ஜேர்மனியிலுள்ள மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணமாகி அழைக்கலாம். வேண்டிய மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா, யாழ் நாச்சிமார், கோவிலடி. (35303)

30 வயது, அவிட்டம் 3, இராபாவம் 60, பிரான்சிலுள்ள மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் ஐரோப்பா நாடுகளிலோ, கனடாவிலோ வேண்டப்படுகிறது. வேண்டிய மணமக்களுக்கு நாடுங்கள்: ஞாயிறு காலையில். து விமலா, யாழ்/ நாச்சிமார், கோயிலடி. (35304)

## பாலா ஆசிரியராக

விரைவில் பயிற்சி ஆரம்பம்: க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை சனி, ஞாயிறு சமூகம் தர வசதியற்றோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி. ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (35295)

## மணப்பெண் தேவை

ஐரோப்பிய நாடு ஒன்றில் பிரசாவுரிமை பெற்று, நிரந்தர தொழில் புரியும், பூச நட்சத்திரம். 36 வயதுடைய நற்குணமுள்ள, யாழ் இந்து மணமகனுக்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. சாதகத்துடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல 762, மே/பா உதயன், யாழ்ப்பாணம், [35302]

## துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்களும் தொடர்புகொள்ளவும். சகல குறிப்புகளும் உண்டு. எல்லா நாட்களிலும் படம், குறிப்புடனும் லண்டன், சுவிஸ், கொலன் மணமக்கள் இருக்கிறார்கள். உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: துர்க்கா திருமண சேவை. 'வளர்மதி இல்லம்', கே. கே. எஸ். றோட், மல்லாகம். [8252]

## REPAIR'S!

Repairs! Are your Radios T Vs. Decks Giving Trouble? Bring them to us and Get them Repaired with Guarantee. Dilka Watch and Radio Works 284, Stanley Road Ariyakulam Junction) Close to Vanavil Jaffna, Branch Kandy Road Chavakacheri [சி-364]

## கொடிகாமத்தில் பாணுக்கு தட்டுப்பாடு

கொடிகாமம், பெப் 21

கொடிகாமத்தில் இன்னும் பாண் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

குடாநாட்டில் ஏனைய இடங்களில் பாணுக்கு இருந்த தட்டுப்பாடு நீங்கியுள்ள போதும், இங்கு மட்டும் இன்னும் தட்டுப்பாடு நிலவுவது ஏன் என்று பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

ஆனால் பட்டர் பாண், கேக், பணிஸ் போன்றவை தாராளமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. [ஒ]

---

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

நூற்றாண்டு விழாவையொட்டி

நடைபெற்ற

அதிர்ஷ்ட இலாபச்

## சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இல 457

2 ஆம் பரிசு இல 10919

3 ஆம் பரிசு இல 4652

ஆறுதற் பரிசுகள் (10)

இல 9387 9048 10870 515 8996
3687 5996 8426 1306 1549

பரிசிற்குரியவர்கள் கல்லூரி அலுவலகத்தில் உரிய சீட்டுக்களைச் சமர்ப்பித்து பங்குனி 15ற்குமுன் பெற்றுக்கொள்ளவும்

— அதிபர்.

(சி/589)

---

இலங்கை

## இளங்கலைஞர் மன்றத்தின்

# 15ஆவது இசை விழா

கலா மண்டபம் • சட்டநாதர் வீதி, நல்லூர்.

**11ஆம் நாள் 21 - 02 - 1995**

செவ்வாய்க்கிழமை

நாயன்மார்கட்டு வைத்தியசாலை

ஆதரவில்

மாலை

**4-00 — 5-00 மங்கல இசை**

எஸ் சுப்பிரமணியம்
என். ஆர். சந்தானகிருஷ்ணன்
ஏ முருகானந்தம் ) நாதஸ்வரம்

என். ஆர். எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுதாகரன்
பி முருகதாஸ் ) தவில்

**5-00 — 5-20 பாட்டு**

ருபிணி துரைசிங்கம்
செங்காதர்சினி பழனித்துரை
ஜானுஜினியா ) பாட்டு
சிவகலா சிவஞானம் — வயலின்
பி ரதிருபன் — மிருதங்கம்

**5-20 — 5 40 வயலினிசை**

காயத்ரி ராஜமகேந்திரசிங்கம்
திருமகள் கார்த்திகேசு
அனுஷா பரராஜசிங்கம்
மைத்திரி ராஜமகேந்திரசிங்கம்
சர்வாங்கினி நடனசபா
சந்திரிகா சோதிநாதன்
கேதீஸ்வரி சண்முகநாதன் ) வயலின்
எம். சஜன் — மிருதங்கம்

**5 40 — 6-00 வீணை இசை**

வி. பவானி — க. யருமிலா
ஸ்ரீ. கஜ சனா — மு. தலைஸ்ரீ
கு வளர்மதி — மு சாந்தசொரூபி
க. மீரா — க. வித்தகி
அ. முரளிதரன் — மிருதங்கம்
ஜி கிருஷ்ணகுமார் — கடம்

**6-00 — 6 45 இரு வயலினிசை**

சிவகலா சிவஞானம்
கௌசல்யா சுந்தரம்பிள்ளை ) வயலின்
எஸ். துரைராஜா — மிருதங்கம்
கே. மயூரன் — கடம்

**6-45 — 7 30 பாட்டு**

ஜெயந்தி செல்லையா — பாட்டு
ஆர் எஸ். கேசவமூர்த்தி — வயலின்
எஸ் துரைராஜா — மிருதங்கம்

**7-30 — 7-50 மங்கல விளக்கேற்றல்**

திரு க பாலசிங்கம் அவர்கள் (சித்ராலயா)
திரு கு உதயன் அவர்கள் (ஆசிரியர்)
திரு வே. புண்ணியமூர்த்தி அவர்கள் (லஷ்மி அச்சகம்)

★ அருளுரை
சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் அவர்கள் (தெல்லிப்பழை)

★ தலைவர்
திரு செ. சத்தியமூர்த்தி அவர்கள்

★ பிரதம விருந்தினர்
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள்

★ சிறப்பு விருந்தினர்
வைத்திய கலாநிதி இ. உமாகாந்தன் அவர்கள்
திருமதி ஜெகதாம்பாள் உமாகாந்தன் அவர்கள்

**7-50 — 8 50 பாட்டு**

எல். திலகநாயகம்போல் — பாட்டு
ஆர் எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாசன் — மிருதங்கம்
சதா வேல்மாறன் — கடம்

**8-50 — 10 00 பரதநாட்டியம்**

உருத்ரோய் நாட்டிய அக்கடமி
திருமதி பத்மினி செல்வேந்திராவின் மாணவிகள்

வாழ்த்துவோர்:

காகோ மரக்காலை

105, சட்டநாதர் வீதி, நல்லூர்.

---

அர்ச்சகர்

## பதவி வெற்றிடம்

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு பின்வரும் தகைமைகளையுடைய அர்ச்சகர் தேவை.

1. குருப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்
2. வயது 45 க்கு மேல் இருக்க வேண்டும்
3. திருமணம் முடித்து குடும்பத்துடன் வாழ்பவராக இருக்க வேண்டும்
4. நல்லொழுக்கம் உடையவராகவும், குற்றப்படாதவராகவும் இருக்க வேண்டும்
5. கோயிலின் மூன்று காலப் பூசைகளையும் தானே செய்யக் கூடியவராகவும் சபையின் பிரமாணங்களுக்கும், தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு ஒழுகி நடக்கக் கூடியவராயும் இருக்க வேண்டும்.

**கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**

மேற்படி தகுதியுடைய அர்ச்சகர்கள் நியமனம் பெற விரும்பின், தங்களைப் பற்றிய பூரண விவரங்களுடன் விண்ணப்பங்களை **28 - 02 - 1995** க்கு முன்னர் பதிவு அஞ்சலில் சபையின் கௌரவ செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

கா. புஸ்பராசா
கௌரவ செயலாளர்

தும்பளை நெல்லண்டை அம்மன்
கோயில் தரும பரிபாலன சபை.

"சந்திரோதயம்"
வெளிச்ச வீட்டு ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை. [சி-588]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 24 — 05 — 1916



இறப்பு: 04 — 03 — 1994

மல்லாகம்

### அமரர் கந்தையா சின்னத்தம்பி

[இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்]

**திதி: 21 — 02 — 1995**

எங்கள் குடும்பத் தலைவன் மல்லாகம் இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட் கந்தையா சின்னத்தம்பி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (21-2-1995) செவ்வாய்க்கிழமை அவரது மல்லாகம் இல்லத்தில் நடைபெறும் என்பதையும், அத்தினத்தில் அவரது சுற்றத்தார், அன்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அவரது ஆத்ம சாந்திக்கு
இறைவனைப் பிரார்த்திக்கும்;

மருமகன்: அ. இரத்தினசிங்கம்,
மகள்: சறோஜினிதேவி,
பேர்த்திமார்.

கோணப்புலம்,
மல்லாகம். (8257)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 24 — 06 — 1912



உதிர்வு: 22 — 01 — 1995

அமரர்

### முருகுப்பிள்ளை முத்துச்சாமி

பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், பொறுமைக்கோர் திருவுருவாய் இம்மண்ணில் வாழ்ந்து 22 - 01 - 1995 இல் அமரரான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[illegible]
வட்டுக்கோட்டை. [35269]

---

## தேவை

யாழ். நகரில் பிரபலமான தொழில் நுட்ப கல்லூரிக்கு தமிழ் - ஆங்கில தட்டச்சு ஆசிரியர் தேவை.

இல. 963
மே/பா. உதயன்

(சி/385)

---

யாழ் மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்
சங்க பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு

## 3 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

12 – 03 – 1995

மேற்படி சங்கத்தின் 3 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 12 03 95 ஞாயிற்றுக்கிழமை, காலை 9 30 மணிக்கு, சங்கத் தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் நடைபெறவிருக்கின்றதென்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

உபவிதி 26 இல் 7 ஆவதின் பிரகாரம் மேற்படி வருடாந்தக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்க விரும்பின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அப்பிரேரணைப் பிரதியொன்றை 06 03 95 க்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். குறிப்பிட்ட பிரதி பின்னர் கிடைக்கப்பெறின், பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாதென்பதையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

— நன்றி —

யா. மா. வெ. உ. ச
ந பாலவிநாயகர்
மாவட்ட செயலாளர்.

யா. மா. வெ. உ. ச
த. சிவசுப்பிரமணியம்
மாவட்ட தலைவர் [சி/593]

---

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு: 23 — 10 — 1975



உதிர்வு: 19 — 02 — 1995

### சற்குணம் மணிவதனன்

(A/L 1994 Bio)

(யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் அணி முன்னாள் கப்டன்)

மத்தியின் மணியே!

சித்தம் கலங்க வைத்துச் சிறகடித்துப் பறந்தாயே!
துடுப்பாட்ட வீரனாய் துலங்கி எம் மத்தியின்
எடுப்பான வெற்றிக்கு இலக்காக நின்றாயே!
சென்ற ஆண்டிலே அணித்தலைவனாகி நின்று
வென்ற பெருமிதத்தை வியந்து போற்றி நின்றோம்.
பாட்மின்ரன் உதைபந்து பலமிக்க பலவேறு
ஆட்டங்கள் ஊடாக அளப்பரிய பணிசெய்தாய்!
இன்றுவந்த செய்தி இடிபோலத் தாக்கியதே!
நண்பா! நின் நினைவால் அதிபர், ஆசிரியர்,
துன்ப சாகரத்தில் துடிக்கின்றார் மாணவர்கள்
உன்னை நினைந்து உளம் வதங்கி நிற்கின்றார்
எங்கள் மத்தியத்தாய் ஏங்கி அழுகின்றாள்
தங்க மகனே! நீ சாந்தி பெற்றிடுக.
உந்தன் ஆத்மபலம் எமக்குப் பெரும் வெற்றி
தந்து துடுப்பாட்டம் தழைக்க வைத்திடுவாய்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்,
நலன்விரும்பிகள்-
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,

(சி/590)

---

மத்தியின் மணிக்கு
சென்றலைற்ஸ்
விளையாட்டுக் கழகத்தினரின்

## கண்ணீர் அஞ்சலி

### செல்வன் எஸ். மணிவதனன்

[முன்னாள் யாழ். மத்திய கல்லூரி மாணவன், 1994ஆம் ஆண்டு கிரிக்கட் அணித் தலைவன்]

எமது கழகத்தின் அங்கத்தவரும், விளையாட்டு வீரனுமாகிய செல்வன் எஸ். மணிவதனன் அவர்கள் அகால மரணம் அடைந்ததையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சென்றலைட்ஸ்
விளையாட்டுக் கழகம்

[சி-596]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் விதி
யாழ்ப்பாணம்

## சிலுசிலுப்பால் பயனில்லை

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சிவில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவியை, முன்னரெல்லாம் சிவில் அதிகாரிகளே வகித்து வந்தார்கள். திருவாளர்கள் ரி. டபிள்யு ஜெயசிங்கா, என் கியு. டயஸ் போன்றோர் ஏதோ ஒரு வகையில் இப்பதவியில் இருந்து பெயர் பெற்றவர்கள்.

அரசியலிலும் சரி, அரசாங்க நிர்வாகத்திலும் சரி, தனது சொந்த நன்மைக்காக பல மாற்றங்களைச் செய்து குளறுபடிகளை உருவாக்கிய ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்திலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் படை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

1977 இல் பதவிக்கு வந்தவுடனேயே நாடாளுமன்றத்தில் வைத்துப் "போர் என்றால் போர்" என்று வீரப்பிரதாபம் பேசியவர் ஜே. ஆர். தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை இராணுவ ஆதிக்கத்தினால், ஆக்கிரமிப்பினால் நசுக்கிவிடலாம் என்று அப்போது கற்பனை செய்தவர். (ஆனால் பின்னர், அது இயலாத செயல் என்று அறிந்து ராஜீவ் காந்தியுடன் ஒப்பந்தம் செய்து இந்திய இராணுவத்தை வருவித்தார்.)

தமிழ் மக்கள் மீது போர் நடத்தி அவர்களை அழித்து, அச்சுறுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக படை உயர் அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டிய தேவை அவருக்கு இருந்தது. அதனால் அவர் தமது எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக சேபால அட்டிகலவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமித்தார். அதன் மூலம் தமிழ் மக்கள் மீதான போருக்கு உறுதியான அடித்தளத்தை, அத்திவாரத்தைப் போட்டார்.

அந்த அத்திவாரத்தின் மீது கடந்த பதினேழு வருடங்களாக தமிழ் மக்கள் மீது போர் திணிக்கப்பட்டதும், அதனால் சமாதானம் இருளுக்குள் மறைந்து போனதும் வரலாற்றுப் பதிவுகள் ஆகிவிட்டன. போரின் கொடுமைகள் தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும பல வகைகளாலும் பாதித்துவிட்டதையும் எல்லோரும் அறிவர்.

அதன் விளைவாகவே போரை நிறுத்தி, அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க வேண்டும் என்று சிங்கள மக்கள் சந்திரிகா அரசுக்குத் தேர்தல் மூலம் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவிக்கு சிவில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது ஒரு மாற்றமே. எனினும் அந்த நியமனத்தைச் செய்துள்ளதால் புதிய அரசாங்கம் போரை முற்றாகப் புறந்தள்ளி விட்டதாகக் கருதலாகாது.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் தோல்வி கண்டால் — பயன்தராவிட்டால் — மீண்டும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கத் தாம் தயங்கப் போவதில்லை என்ற தொனியில் ஜனாதிபதி சந்திரிகா பிரெஞ்சு நாளிதழுக்கு வழங்கிய செவ்வியின் போது தெரிவித்தார்.

புதிய அரசாங்கமும் போரை மறந்து விடவில்லை, ஒதுக்கி விடவில்லை என்பதனையே இது எடுத்துக் காட்டுகிறது.

படை அதிகாரி ஒருவர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக இருப்பதால் முப்படை உயர் அதிகாரிகளின் திட்டங்கள் இலகுவாக ஒப்பேறும்; சிவில் அதிகாரி அந்தக் கதிரையில் இருக்கும் போது பல விடைகள், விளக்கங்கள் அளிக்க நேரிடலாம். இராணுவ அதிகாரியின் தலைமையில் படைகளில் ஊழல் மோசடிக்கு நிறைய இடமிருக்கும்; ஆனால் சிவில் அதிகாரி அவற்றுக்கு ஒத்தாசையாக இருக்க விரும்ப மாட்டார் என்பன போன்ற சிறு வேறுபாடுகள் இருக்கக் கூடும்.

இங்கே, ஆளைப் பார்த்து எதனையும் ஊகித்து விடலாகாது. ஆட்டத்தைப் பார்த்துத் தான் புதிய அரசின் போக்கை நிச்சயமாகச் சொல்லலாம். தேவைப்படுவது சிலுசிலுப்பல்ல; பணியாரம் தான்!

## யாழ். மாநகரசபைப் பகுதியில்
# நோய் பரவுவதைத் தடுக்கத் திட்டம்
### யுனிசெவ் உதவியுடன் செயல்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், பெப். 21

'யுனிசெவ்' ஸ்தாபனத்தின் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபை பகுதிக்குள் வயிற்றோட்டம் மற்றும் குடல்சார்ந்த நோய்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்று இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

முதல் கட்டமாக குடல் சார்ந்த நோய்கள் அதிகம் காணப்படும் இடங்களை முன்னுரிமை அடிப்படையில் இனங்கண்டு, அங்கு சூழல் சுகாதாரம் பற்றிய விழிப்பு ஏற்படுத்தப்படவிருக்கிறது.

இரண்டாம் கட்டமாக மலகூடம் இல்லாத வீடுகளுக்கு மலகூடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இரண்டாம் கட்டத்தின் முதல் நான்கு மாதங்களில் 400 மலகூடங்கள் அமைத்து கொடுக்கப்படவிருப்பதாகவும்— இதன் பலாபலன்களை அவதானித்து யுனிசெவ் உதவியுடன் ஏனைய பகுதிகளுக்கும் விரிவாக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்படியாக யாழ். மாநகர சபையின் அனைத்து வெளிக்கள சுகாதார ஊழியர்களுக்கும் இந் நோய் சம்பந்தமான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. (எ-4)

## வேலை இழந்த
# 175 கிராம அதிகாரிகளுக்கு மீண்டும் நியமனம்

கொழும்பு, பெப். 21

அரசியல் காரணங்களுக்காக 1977 ஆம் ஆண்டில் வேலை இழந்த 175 கிராம சேவை அதிகாரிகளுக்கு மீண்டும் வேலை வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த அதிகாரிகள் விசேட பயிற்சி பெற்ற பின்னர், 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தினால் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அதன்பின் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை.

இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது என்று அமைச்சரவைப் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மீண்டும் நியமனங்கள் வழங்கப்படுவதுடன் சம்பள அதிகரிப்பு பற்றி பரிசிலனை செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஐ-4)

## விவசாய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 21

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய கூட்டுறவு சமாசம், விவசாய திணைக்களம் போன்றவற்றின் அனுசரணையுடன் விவசாயக் கருத்தரங்கு ஒன்றை கடந்த 12ஆம் திகதி நடத்தியது.

நெல் அறுவடையின் பின்னர் வயல்களில் சிறுதானிய பயிர்களை விதைப்பது, அவற்றிற்கு தேவையான சிறுதானியங்களை விவசாயிகளுக்கு வழங்குவது ஆகியன தொடர்பான நடவடிக்கை பற்றி இக்கருத்தரங்கில் முடிவெடுக்கப்பட்டதாக சங்க தலைவர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

## தெளிகருவி விநியோகம்

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட தெளிகருவிகளை யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது. (எ-17)

# இலவசக்கல்வி முறையை ஒழிக்க அரசு முயல்வதாக குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 21

இலவசக் கல்வி முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாக தென்பகுதி பல்கலைக்கழக மாணவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தேசிய கல்விக் கொள்கை ஒன்றின் மூலம் பல்கலைக்கழக கல்வி முறையை தனியார் மயப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று—

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனையின் பெயரில் நாட்டில் இலவசக் கல்வியை ஒழித்துவிட அரசு முயலுகின்றது என பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சபையும் குற்றஞ்சாட்டியுள்ளது.

கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன என்றும்—

பல்கலைக்கழகங்களில் அனுமதியின்மையை அரசாங்கமே தூண்டிவிடுகிறது என்றும் இதன் காரணமாகவே ஸ்ரீஜெயவர்த்தன பல்கலைக்கழகமும், றுகுணு பல்கலைக்கழக கலைப்பீடமும் மூடப்பட்டிருப்பதாகவும் பல்கலைக்கழகங்கள் இணைப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. ரிச்சார்ட் பத்திரன — எவ்வகையிலும் அரசாங்கம் இலவசக் கல்வியை ஒழிக்க நோக்கம் கொண்டிருக்கவில்லை. அதை மேலும் அர்த்தமுள்ளதாக அமுல் நடத்தவே அரசு உறுதி பூண்டுள்ளது— என்றார்.

கல்விக்கு பெருந்தொகையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும்—

கல்விச் செலவீனத்தைக் குறைக்குமாறு உலக வங்கியோ அல்லது சர்வதேச நாணய நிதியமோ எந்தவித கோரிக்கையையும் விடுக்கவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தென்பகுதியில்
# மோசடி வர்த்தகர்களை பிடிக்க விசேட குழு

கொழும்பு, பெப். 21

தெற்கில் மோசடியில் ஈடுபடும் வர்த்தகர்களைக் கண்டுபிடிக்க திடீர் சோதனை குழு ஒன்றை அரசு நியமித்திருப்பதாக தெரியவருகிறது.

இந்தத் திடீர் சோதனைக் குழுவில் நாறுபேர் இடம்பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மக்களைச் சுரண்டும் மோசடியில் ஈடுபடும் வர்த்தகர்களை இக் குழு கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும் என தெரிவிக்கப்படுகிறது. [ஐ]

## அரசு மருத்துவமனைகளில் உள்ள
# ஜெனரேற்றர்களை இயக்க டீஸல் எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ் மாவட்டத்தில் அரசினர் வைத்தியசாலைகளில் உள்ள ஜெனரேற்றர்களை இயக்குவதற்கு மாதம் ஒன்றிற்கு தேவையான 60 பீப்பாய் டீஸலை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான அனுமதி வழங்குமாறு யாழ் சுகாதார திணைக்களம் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவிடம் கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் 14 ஜெனரேற்றர்கள் டீஸல் இன்றி இயங்காமல் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-17)

# எள் செய்கையில் ஈடுபடுக! பொருண்மியம் அறிவுறுத்து

நெல் அறுவடை முடிவடைந்தவுடன், நிலத்தில் உள்ள ஈரத்துடன் உடனடியாக எள்ளைப் பயிரிடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.

என் எண்ணைப் பயிராக இருப்பதுடன் வருமானம் தரும் பயிராகவும் உள்ளது. நெல் அறுவடை செய்தவுடன் நிலத்திலுள்ள ஈரத்துடன் எதுவித நீர்ப்பாசனமும் இன்றி எள்ளைப் பயிரிட முடியும் என்று அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசுமை வேளாண் சேவை நிலையங்களில் எள் செய்கைக்கான உள்ளீடுகளை பெற்றுக் கொள்ளலாம். தேவையான ஆலோசனைகளை சகல தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஆகவே அனைத்து விவசாயிகளையும் எள் செய்கையில் ஈடுபடுமாறு மேலும் செய்திக் குறிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (எ)

## நீதிமன்ற உத்தரவை மீறி
# சிசில் தப்பி ஓடுவதை தடுக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 21

முன்னாள் ராணுவத் தளபதி லெப். ஜெனரல் நீதிமன்றம் விதித்ததடை உத்தரவை மீறி நாட்டை விட்டு தப்பி ஒடாதிருக்க குடிவரவு, குடியேற்றத் திணைக்களத்தின் அதிகாரிகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிசில் வைத்தியரத்தினாவின் பதவிக்காலத்தில் ராணுவத்தில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவு மற்றும் செயல்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதும் —

அதனை அடுத்து அவரின் கடவுச்சீட்டை ஒப்படைக்கும்படி அவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இளங்கலைஞர் மன்ற இசைவிழாவில் நாளை

யாழ்ப்பாணம், பெப் 21

இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் பதினைந்தாவது ஆண்டு இசை விழாவின் 12ஆம் நாளான நாளை புதன்கிழமை மாலை 4மணி—5மணிவரை எம். கோவிந்தராஜன், எஸ். சிறீதரன் குழுவினரின் மங்கள இசையும் இடம்பெறும் 5 மணிக்கு மன்ற மாணவர்களின் மிருதங்க இசை, பாட்டு, வயலினிசை, வீணை இசை 6-20மணிக்கு சுகன்யா சிவானந்தனின் பாட்டு.

7-05மணிக்கு எம். ஸ்ரீரங்கநாதனின் பாட்டு, 8-10 மணிக்கு கே. இராமநாதனின் பாட்டு, 9-10 மணிக்கு திருமறைக் கலாமன்ற பயிலக மாணவர்களின் பரத நாட்டியம் என்பன இடம்பெறும்.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு நா. க. சண்முகநாதபிள்ளை தலைமையில், கோண்டாவில் நிரு ரியூசன் சென்ரர் ஆதரவில் நடைபெறும் நாளைய நிழ்ச்சியில் அருளுரையை சிவஸ்ரீ இ. சிறிகுருக்களும், பிரதம விருந்தினர் உரையை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரனும் வழங்குவார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சொலமன் சூ. சிறில். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார்கள். (எ-5-111)

## புலிகளின் குரல் வானொலியில்

21 — 02 — 1995
செவ்வாய் இரவு

★ 8-01 — ஊர்சுற்றும், ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் தகவற்களஞ்சியம்
★ 8-20 — நலந்தானா— நிகழ்ச்சியில் ' மருந்துக் குளிசைகளின் தவறான பயன்பாட்டால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன்எழுதிய "சமாதானம்"
★ 8-50 — மலரும் மொட்டுக்கள் என்பன இடம்பெறும்.

22 — 02 — 1995
புதன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

செவ்வாய் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம் — 08
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — இவ்வாரம்இவர்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு
★ 6-30— மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## கூடைப்பந்தாட்ட போட்டிகள்

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ் கிளை யாழ். மாவட்ட ரீதியில் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

★ 3 30 மணி பல்கலைக்கழக 'ஏ' அணி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி
★ 4-30 மணி ஓல்ட் கோல்ட்ஸ் அணி எதிர் உதயன் வி. க. அணி (எ)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், பெப். 21

நவாலி தெற்கிலுள்ள அ. மி. த. க பாடசாலையின் முற்பக்க வேலியை பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரும் நலன் விரும்பிகளும் அண்மையில் சிரமதானம் மூலம் அடைத்துக் கொடுத்துள்ளனர் இவ்வேலி கடந்த பல ஆண்டுகளாக சிரற்ற நிலையில் இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-20)

# அரசின் கல்வித்துறை கொள்கை தீயவிளைவுக்களை ஏற்படுத்தும்

ஐ. தே. க. அரசின் கொள்கைகளை கண்டித்து, தாம் பதவிக்கு வந்தால் பாரிய மாற்றங்களை கொண்டு வருவோம் என்று கூறி வாக்குறுதிகளை அளித்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி அளித்த வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட இதுவரை நிறைவேற்றவில்லை.

இந்நிலையில் —

பொ.ஐ. முன்னணியை ஆட்சியில் அமர்த்த அரும்பாடுபட்ட 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவனின் மற்றுமோர் ஆதங்கம் இது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவால் அறிமுகப் படுத்தப்பட்ட அத்தனை திட்டங்களும் இந்த அரசாங்கத்தினால் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்பது தெளிவான விடயமாகும்.

பிரேமதாசா அறிமுகப் படுத்திய பாடசாலை மாணவர்களுக்குச் சீருடை வழங்கும் திட்டமும் முன்பு போலவே நிறைவேற்றப்பட்டு வருகிறது.

### மாணவர் சீருடை திட்டம்

சீருடை வழங்குவதால் கல்விக்கு மேலதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. எனினும் கல்வி விடயத்தில் இதற்கு மேலான எத்தனையோ முக்கிய பிரச்சினைகள் உள்ளன என்பதை புதிய அரசு அறிந்து கொள்ளவில்லை.

நடைமுறையிலிருந்த பழைய அரசமைப்பு முறையின் கீழ் கல்விக்காக தேவைப்படும் கட்டடம், தளபாடங்கள் போன்றனவற்றை அரசு தனது செலவிலேயே வழங்கி வந்தது. மாணவர்களின் உடை மற்றும் தேவைகள் பெற்றோரினாலேயே கவனிக்கப்பட்டு வந்தன.

ஆனால் புதிய நடைமுறையின் கீழ் அரசாங்கம் பெற்றோரின் கடமைகளைப் பொறுப்பேற்கிறது. தனது கடமைகளைப் பெற்றோரிடம் கையளித்துள்ளது.

அரசு மாணவர்களுக்குச் சீருடை வழங்கும் அதே வேளையில் பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடம், தளபாடங்கள் போன்றனவற்றிற்கான செலவுகளை பெற்றோரின் பொறுப்பில் விட்டுள்ளது.

சீருடைகளை வழங்கத்தான் வேண்டும் என வைத்துக் கொண்டாலும், அச்சீருடைகள் ஒரு சில மாணவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டும்; அனைத்து மாணவர்களுக்கும் அல்ல

அனைத்து மாணவர்களுக்கும் சீருடை வழங்குவது என வைத்துக் கொண்டாலும் அதற்குத் தேவையான துணியை உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்றுறை இங்கு இருக்கும் போது சீருடைக்குப் படும் துணியை சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவையில்லை. பல்வேறு வகையான துணி வகைகளை உற்பத்தி செய்யக்கூடிய நெசவுத்தொழிற்சாலைகள் வேலையின்றி முடங்கிக் கிடக்கையில் சீருடை வழங்குவதற்கென 110 லட்சம் மீற்றர் துணியைச் சீனாவிலிருந்து இறக்குமதி செய்வது போன்ற முட்டாள்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது.

ஒரு புறத்தில் சீருடை வழங்கும் திட்டத்திற்கென அரசு சுமார் 48 கோடி ரூபா செலவு செய்கிறது. ஆனால் மறுபுறத்தில் பாடங்களைப் போதிக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லாத எமது நாட்டில் ஆசிரியர் பயிற்சிக்காக சுமார் 18 கோடி ரூபா மாத்திரமே செலவிடப்படுகிறது.

கல்விக் கொள்கையை மீள் பரிசிலனை செய்ய வேண்டிய தேவை அரசிற்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை. காலங்கடந்த போதிக்கும் முறைக்குப் பதிலாக உலகில் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய, இலகுவான போதிக்கும் முறையை அமுல்படுத்தப்படுவதன் முக்கியத்துவம் கூட அரசிற்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை. ஆசிரியர்களுக்கிடையே போதிக்கும் ஆற்றலற்ற ஆசிரியர்கள் பெருமளவில் இருப்பதால் தோன்றியுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய தன் அவசியம் கூட அரசிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. [illegible] சாலைக்கான அனுமதிபெறும் முறையை மீளமைக்க வேண்டிய தேவை அரசிற்கு இருப்பதாகத் தெரியவில்லை.

### பாடசாலை அனுமதி விவகாரம்

பிரபல பாடசாலைகளில் ஆண்டு ஒன்றில் சேர்ப்பதற்கான போட்டி ஒரு பெரிய போர் போல் உருவாகி வருகிறது. ஒரு சில பாடசாலைகளுக்கு மாத்திரம் மாணவர்கள் பெருமளவில் சேர்க்கப்படுவதால் அப்பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை அவை தாங்க முடியாதளவிற்கு அதிகரிப்பதுடன் பிரபலமற்ற பாடசாலைகள் பல போதுமான அளவு மாணவர்கள் இல்லாத காரணத்தினால் மூடப்படுகின்றன

கல்வி அமைச்சர் பயின்ற கலைக் கல்லூரியே போதியளவு மாணவர்கள் இல்லாத காரணத்தினால் அண்மையில் மூடப்பட்டது.

பிரபல பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு லஞ்சம் வழங்குவது சட்டாயமான ஒரு நிபந்தனையாக உருவெடுத்துள்ளதுடன் தேவைப்படும் போலி ஆவணங்களைத் தயாரிப்பதற்கென பல நிறுவனங்களும் தோன்றியுள்ளன. இவ்வாறான ஓர் அனுமதி முறையில் மாற்றங்களை மேற்கொள்ளாது இந்த முறையையே தொடர்ந்தும் கடைப்பிடிக்க மூடத்தனமான ஓர் அரசினால் மாத்திரமே முடியும்.

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரித்தது நல்ல விடயமாயினும் அதன் மூலம் மாத்திரம் கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண முடியாது. கல்வித்துறையைச் சேர்ந்தோரான ஆசிரியர்களிடையே போதிய தகைமை இல்லாத ஆசிரியர்களும் போதிக்கும் ஆற்றலற்ற ஆசிரியர்களும் மலிந்திருப்பது அத்துறையில் சீரழிவு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும் ஜனசவிய பெறும் குடும்பத்தில் ஒரு அங்கத்தவராக இருப்பதையும் பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு உட்பட்ட குடும்பத்தின் அங்கத்தவராயிருப்பதையும் அடிப்படைத் தகைமைகளாகக் கருதி ஆசிரியர் சேவையில் சேர்க்கப்பட்டோர் பெருமளவில் உள்ளனர் ஏழ்மைக்குக் கருணை காட்டத்தான் வேண்டும்: ஆபத்திற்குட்பட்டவர்களுக்கு உதவிகள் செய்யத்தான் வேண்டும்; இருப்பினும் ஆசிரியர் என்ற சிறப்பான தொழிலுக்கு ஒருவரைச் சேர்த்துக்கொள்ளும் போது அவரது கல்வித் தகைமைக்குப் பதிலாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை அடிப்படைத்தகைமைகளாகக் கருதி அத்தகைமைகளே தெரிவைத் தீர்மானிக்கும் தகைமைகளாகக் கருதப்படுமாயின் கல்வித்துறையில் பாரிய பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்தவே முடியாது.

கல்வி முறையில் உரிய, அர்த்தமுள்ள மாற்றங்களைப் பற்றிச் சிந்திக்காது முன்னைய அரசு கடைப்பிடித்த வழிமுறைகளை இந்த அரசும பின்பற்றத் தீர்மானித்தால் துன்பகரமான, தீயவிளைவுகளே ஏற்படும் என்பது உறுதி. [ஐ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் பாலச்சந்திரன்

நல்லூர், செட்டித்தெருவை பிறப்பிடமாகவும், அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாலச்சந்திரன் (முன்னாள் யாழ். கூட்டுறவுச் சங்க ஊழியர்) நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனம் — அன்னம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், அற்புதமலரின் அன்புக் கணவனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் (அராலி மத்தி) அன்பு மருமகனும், ரவிச்சந்திரன் (லண்டன்), சந்திரிகா (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி N.C A T. Day Class] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (21-02-95) அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(35310)

## திருமதி நேசமலர் பாலகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி

நுணாவில் மத்தியைச் சேர்ந்த திருமதி நேசமலர் பாலகிருஷ்ணன் 19-2-95 அன்று காலமானார்.

அன்னார் திரு. செல்லையா பாலகிருஷ்ணனின் (சட்டத்தரணி J. P. U. M.) அன்பு மனைவியாரும், காலஞ்சென்ற திரு. திருமதி பண்டிதர் தம்பாபிள்ளை அவர்களின் மூத்த புதல்வியும், Dr. மயூரன் (Otago University New Zeland) ஈஸ்வரன் (University of Massey New Zeland) வாசுகன் (Engineer Australia), கல்பனா (Veterinery Science Student Peradenia), நிர்மலராஜன் (Accountant CIMA Final year Engineering Faculty Peradenia) நந்தகுமார் (Engineering Student Moratuwa) ஆகியோரின் அன்புத் தாயாரும், குமுதினியின் (Accountant New Zeland) அன்பு மாமியாரும், திருமதி பவளரட்ணம் நாகேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியை), திரு குணசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி சொர்ணமலர் கணபதிப்பிள்ளை (ஆசிரியை, பட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ. பாலகிருஷ்ணன்
[கணவர்]

''சிவஸ்தான்''
நுணுவில் மத்தி,
சாவகச்சேரி.

[35300]

## பண்டிதர்
## அம்பலவாணர் பொன்னுத்துரை

(இளைப்பாறிய அதிபர்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் தற்போது கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதர் அ. பொன்னுத்துரை 20-2-1995இல் சிவபதமடைந்தார். அன்னார் திருமதி நாகரத்தினத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு (ஆசிரியை - கொழும்பு), திரு. பொ. கல்யாணசுந்தரம் (ஆசிரியர் – நாரந்தனை), திருமதி கமலாதேவி தர்மலிங்கம்(ஆசிரியை-கொழும்பு) பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப் பீடாதிபதி - யாழ். பல்கலைக்கழகம்), Dr. பொ. விமலேந்திரன் (கனடா), திரு. பொ. பாலேந்திரன் (பொறியியலாளர் - கனடா), திருமதி விமலாதேவி விஜயகுமார் (ஆசிரியை - கனடா), திரு. பொ. யோகேந்திரன் (பொறியியலாளர் - லண்டன்), திரு. பொ. இரவீந்திரன் (கணக்காளர் - லண்டன்), திரு. பொ. புவனேந்திரன் (கணக்காளர் - லண்டன்), திருமதி நிர்மலாதேவி லோகராஜ் (கனடா), காலஞ்சென்ற செல்வி பொ. வத்ஸலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு க. திருநாவுக்கரசு (கணக்காளர் - கொழும்பு), திருமதி ப. கல்யாணசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ். கன்னியர்மடம்), திரு. செ. தர்மலிங்கம் (ஆசிரியர் - கொழும்பு), திருமதி இ. பாலசுந்தரம்பிள்ளை (யாழ். மத்திய கல்லூரி), திருமதி வி. மங்கையர்க்கரசி (கணக்காளர் – கனடா) திருமதி பா. உமாகாந்தி (கனடா), திரு. மு. விஜயகுமார் (கணக்காளர் - கனடா), Dr. திருமதி வனஜா (லண்டன்) திருமதி உஷா (லண்டன்), திருமதி றஞ்சி (கணக்காளர் – லண்டன்) திரு. கா. லோகராஜ் (Research Officer - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (22-2-1995) புதன்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. கல்யாணசுந்தரம்,
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,

117/7, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

[35307]

## சண்முகம் கோபாலசாமி

(ஓய்வுபெற்ற லிகிதர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்)

கோணாந்தோட்டத்தை சேர்ந்த சண்முகம் கோபாலசாமி 20—02—95 (திங்கட்கிழமை) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், முகுந்தன் (பிரான்ஸ்), தாட்சாயணி (பிரான்ஸ்), மீனலோஜினி (ஆசிரியை, பாரதி பாஷிய பாடசாலை), தயாபரி, மணிவண்ணன், ரேணுகா, துளசி (யாழ். இந்து மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி), இளையராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநாதனின் (பிரான்ஸ்) மாமனாரும், சிவபாக்கியம், சுப்பிரமணியம், பராசக்தி, நாகரெத்தினம், பரமரெத்தினம், தனபாக்கியம், கனகசபாபதி, சாமிநாதன், சோமசுந்தரம், பவானி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை புதன்கிழமை (22-02—95) 10 மணிகு நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்;
கோ. மணிவண்ணன்
(மகன்)

141/4, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

(35311)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21- 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

### பாடசாலைகளில்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு கா. தவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லூர் மற்றும் யாழ். கோட்டங்களுக்கான பிரதி கல்விப் பணிப்பாளர் திரு.சி. புலந்திரன் பிரதம விருந்தினராகவும், கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. அருண் மாஸ்டர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (எ-5-14)

### கலந்துரையாடல்

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்களை தருவிக்கும் வணிகர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். மணிக்கூட்டு வீதியிலுள்ள யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையத்தில் நடைபெறும்.

இதில் கப்பலில் பொருள்களை கொண்டு வருவோருக்கான தரவுகள்,இடர்ப்பாடுகள் தாமதம், குறைந்து வரும் பொருள்கள் ஆகியவை பற்றி ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

### கொழும்பு செல்லும் நோயாளருக்கு!

நாளைய தினம் புதன் கிழமை கொழும்பு செல்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் நாளை காலை 7-00 மணியளவில் யாழ். பொது வைத்திய சாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### கிரிக்கெட் வீரன் அகால மரணம்

யாழ்ப்பாண கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான சற்குணலிங்கம் மணிவதனன் (வயது 20) நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் அகால மரணமானார்.

யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவரான மணிவதனன் 1993 ஆம் ஆண்டு கல்லூரியின் உதைபந்தாட்ட அணிக்கும் கடந்த வருடம் கிரிக்கெட் அணிக்கும் தலைமை வகித்தவர். கல்லூரியின் மாணவ தலைவனாகவும் இருந்தவர். (உ)

### ஜூலை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டிருக்கிறார்.

இதற்கிடையில் —

கடந்த நான்கு மாத காலத்தில் மூன்று கட்டங்களாக பேச்சுக்களில் அரசு ஈடுபட்டது என்றும் —

நீண்டகால இடைவெளிகளுடன் — இழுபறிகளுடன் — இடம்பெற்ற பேச்சுக்களின் முடிவாக போர் இடைநிறுத்தத்தை மட்டுமே அரசு கொண்டுவந்தது என்றும் ''புலிகளின் குரல்'' சுட்டிக் காட்டியுள்ளது.

தவிர போர் இடைநிறுத்தம் தொடர்பான உடன்படிக்கையின்படி நடந்து கொள்ளாமல் அரசு பல புதிய நிபந்தனைகளை அமுல்படுத்தியது என்றும் —

தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அரசதரப்பில் கூறப்பட்ட போதும் அவை எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் —

பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதும் இராணுவத்தினரின் கெடுபிடிகளால் தடைநீக்கப்பட்ட பொருள்கள் எவையும் தமிழ் மக்களை வந்தடையவில்லை என்றும் —

இவ்வாறான நிலையில் எதிர்வரும் ஜூலைக்குள் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் முடிவடையுமென ஜீ எல். பீரிஸ் கூறியுள்ளார் என்றும் —

'புலிகளின் குரல்' மேலும் சுட்டிக்காட்டியது. [உ-4]

### திருத்தம்

நேற்றைய உதயனில் வெளியான ராசராணிநாயகி அரியரட்ணம் என்பவரின் மரண அறிவித்தலில் —

இரண்டாவது பந்தியில், ரஜகோபாலரத்தினத்தின் சகோதரியும் என்பதனை — ராஜகோபால ரத்தினத்தின் சகோதரியும் என்று திருத்தி வாசிக்கவும்.

### மோட்டார்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சைக்கிள் 8 ஆயிரம் ரூபாவினாலும், சி. எம். 125 ரக மோட்டார் சைக்கிள் 11 ஆயிரம் ரூபாவினாலும் விலை குறைந்துள்ளதாக அவர் சொன்னார்.

இதுவரை காலமும் வெளிநாடுகளில் மூன்று வருடங்களுக்கும் குறைந்த காலம் பாவித்த மோட்டார் சைக்கிள்களையே ''ரீ - கொண்டிஷன்'' வாகனமாக இறக்குமதி செய்ய அரசு அனுமதித்து வந்தது என்றும் —

இதற்குப் பதிலாக ஐந்து வருட காலம் வரை பாவித்த மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும்படி அரசைக் கோரியுள்ளோம் என்றும் —

அதற்கு அனுமதி கிடைத்தால் அவற்றின் விலை மேலும் குறையும் என்றும் அவர் மேலும் சொன்னார். [உ-9]

### திருமலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

களைப் படமெடுத்த தமிழ் இளைஞர்கள் மற்றும் இந்தியாவிலிருந்து வந்த றோட்டறிப் பிரமுகர்கள் ஆகியோரை அண்மைக் காலத்தில் பொலிஸார் கைது செய்திருந்தனர் என்பது தெரிந்ததே. (உ-6)

### ஜே. ஆர்.,---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருப்பதாக தமது பிரதம பாதுகாப்பு அதிகாரி தமக்குத் தெரிவித்தார் என்று திரு. ஜெயவர்த்தனா சொன்னார்.

எத்தனைபேர் குறைக்கப்பட்டுள்ளனர் என்று கேட்டதற்கு —

''காலையில் எழுந்தவுடன் பாதுகாப்பு அதிகாரிகள் எத்தனைபேர் என்று நான் எண்ணிப்பார்க்கவில்லை''— என்று அவர் பதில் கூறினார்.

''என்னைப் பலர் கொலை செய்ய முயற்சித்தார்கள். ஒரு முறை குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. எனக்கு அருகில் இருந்த பலர் கொல்லப்பட்டனர். இது விதி. எனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளை குறைக்க அரசு விரும்பினால் அது பற்றி நான் கவலைப்படவில்லை''- என்றார் அவர்.

''எங்களின் பாதுகாப்புக் குறித்து பயங்கர காலம் ஒன்றிருந்தது. ஆனால் தற்போது அத்தகைய தேவையில்லை. அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பே எனக்குப் போதுமானது'' — என்றும் அவர் சொன்னார்.

பாதுகாப்பைக் குறைத்தது குறித்து கருத்துக் கேட்பதற்காக டி. பி. விஜேதுங்கவுடன் தொடர்புகொள்ளமுடியவில்லை என்றும் —

திருமதி ஹேமா பிரேமதாஸாவின் மகன் சஜித் பிரேமதாஸாவுடன்] தொடர்பு கொண்டபோது ''பாதுகாப்பைக் குறைத்தவர்களிடமே காரணங்களைக் கேளுங்கள்'' — என அவர் பதிலளித்தார் என்றும் —

செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ-4-6)

### தாராளமாக---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை, இயல்பு நிலைக்கு மேம்படுத்தப்படவேண்டும். அதன் பின்னரே சமாதான நடவடிக்கைகளை விரைவுபடுத்த முடியும்.

— இவ்வாறு தூதுக்குழுவினர் கொழும்பில் தகவல் வெளியிட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ-4)

### கிளிநொச்சி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாசுதேவ தலைமையிலான சமாதானக் குழுவினர் கிளிநொச்சிக்குச் சென்றிருந்த போது பேரணி ஒன்று அங்கு நடத்தப்பட்டது.

வன்னி வெகுஜன அமைப்புகளினால் நடத்தப்பட்ட இப் பேரணியில் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

கரடிப்போக்கு சந்தியிலிருந்து புறப்பட்ட இப் பேரணி, சமாதானக் குழுவினர் தங்கியிருந்த கிளிநொச்சி செயலகத்தை சென்றடைய சுமார் 3 மணி நேரம் பிடித்தது.

வவுனியா இராமனூரில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பித்த மற்றொரு பேரணி புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நிறைவுபெற்றது. அங்கு ... பொதுக்கூட்டமும் நடைபெற்றது. (உ-4)

# தமிழ் பேசும் மக்களுக்கென அம்பாறையில் தனி மாவட்டம்

அம்பாறை பெப் 21

அம்பாறை மாவட்டத்தில் கரையோரமாக வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு தனியான நிர்வாக மாவட்டம் அமைக்கப்படுவது இன்றியமையாதது.

இவ்வாறு கல்முனை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பனிஸ் தலைமையில் நடைபெற்ற இக் கலந்

## கருத்தரங்கில் வலியுறுத்து

துரையாடலில் 'சிடா' திட்டத்தின் ஆலோசகர் ஜனாப் மன்சூர், கனேடிய தூதரக முதலாவது செயலாளர் திரு. ஜூலியன் முரோய் ஆகியோரும் பிரதேசத்தைச் சேர்ந்த கல்விமான்கள், பள்ளிவாசல் தலைவர்கள் துறைசார் நிபுணர்களும் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் பங்குபற்றிய பலரும் பின்வரும் கருத்தை வலியுறுத்தினர்:-

வடக்கு—கிழக்கு பிரச்சினையில் அம்பாறை, கல்முனை ஆகிய பிரதேசங்கள் முக்கியமானவை. மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைப் போலவே அம்பாறை மாவட்டத்திலும் கடந்த அரசாங்கத்தினால் சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டுள்ளன.

அதன் விளைவாக முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரேயொரு சிங்கள எம். பியை மட்டுமே கொண்டிருந்த அம்பாறை மாவட்டத்தில் இன்று நான்கு சிங்கள எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இங்கு தமிழர் தமது பிரதிநிதித்துவத்தை இழந்துள்ளனர்.

அம்பாறை கச்சேரிக்குச் சென்றால் சிங்கள மொழியிலேயே அலுவல்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

தொடர்ந்தும் எமது மக்களின் பிரதிநிதிகளை எமது வாக்குகளைக் கொண்டே இழப்பது என்பது இனிமேலும் முடியாத காரியமாகும்— என்று அவர்கள் எடுத்துரைத்தனர். (அ-5)

### ஆலயங்களில்

சாவகச்சேரி நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலய மண்டலாபிஷேக நிகழ்வுகளில், இன்று செவ்வாய்க்கிழமை முதல் 23ஆம் திகதி வியாழக்கிழமை வரை கம்பவாரிதி இ. ஜெயராஜ் சொற்பொழிவாற்றுவார். (எ-14)

### நரோமா சேவை

யாழ்ப்பாணம், பெப். 21

எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திருமலையிருலிந்து புறப்பட்டு வரும் நரோமா கப்பல் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். திங்கள் மாலையே இக் கப்பல் திருகோணமலைக்கு புறப்படும்.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பதிவு செய்தவர்கள் நாளை புதன்கிழமை யாழ். செயலக பரிபாலனக் கிளையில் பணத்தைச் செலுத்துமாறு மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (உ-4)

### சமாதான---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாசு குழுவினரை அழைத்துச் சென்றனர்.

பிரிகேடியர் லயனல் பலகல்ல, இராணுவ கேணல் சாலிய குலதுங்க, மேஜர் சேனநாயக்கா ஆகியோர் தலைமையிலான பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. மோகன் தாஸ் ஆகியோர் வாசு குழுவினரை வரவேற்றனர்.

வவுனியா காமினி வித்தியாலத்தில் வைத்து அங்கு குழுமியிருந்த மக்களுக்கு தங்களது யாழ். விஜயம் குறித்து வாசு குழுவினர் விளக்கமளித்தனர்.

''சமாதான முயற்சியில் தெளிவான நிலை ஏற்பட்டுள்ளது.''

''இந்தச் சமாதான முயற்சிகளை எங்கே தொடங்குவது? எப்படி தொடங்குவது? எவ்வாறு தொடங்குவது? — என்ற கேள்விகளுக்கு எமது விஜயத்தின் மூலம் தெளிவு ஏற்பட்டுள்ளது.

''மோதல் தவிர்ப்பு, சமாதான முயற்சிகளுக்கு நல்ல ஆரம்பமாக உள்ளது. இது நிரந்தர போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்கும் என்பதில் திடமான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

''விடுதலைப் புலிகள் உண்மையாகவே சமாதானத்தை விரும்புகின்றனர். சமாதானம் வேண்டும். சமாதான நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர். சமாதானத்துக்கும் பிரச்சினைத் தீர்வுக்கும் அவர்களது ஒத்துழைப்பின் மூலம் வழிபிறந்துள்ளது.

''சமாதானத் தீர்வுக்குத் தேவையான உறுதியான அடித்தளம் போடப்பட்டுள்ளது

''மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும் என்பதில் எமக்கு முழு நம்பிக்கை உண்டு.

''சமாதான நடைமுறைகளுக்கான செயற்பாடுகள் அடுத்தடுத்து எடுக்கப்படும் நடவடிக்கைகளிலேயே பெரிதும் தங்கியுள்ளன. நாம் நிறையச் செய்யவேண்டியுள்ளது. இவை உடனடியாக செய்யக்கூடியவை அல்ல. விடுதலைப் புலிகள் பல விஷயங்களை எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

''சமாதானத்தின் பூரண வெற்றிக்கு படிப்படியான செயல்பாடுகள் அவசியம்.

''தடை நீக்கப்பட்ட பொருள்கள் எவையும் சரியான முறையில் யாழ்ப்பாணம் சென்றடையவில்லை.

''பொருளாதாரத் தடைத் தளர்வு உரிய பலனை வட பகுதி மக்களுக்கு கொடுக்கவில்லை.

''இத்தடைத்தளர்வு அர்த்தமுள்ளதாக்கப் படவேண்டும் என்று யாழ். மக்கள் எம்மிடம் கோரினர்''.—

—இவ்வாறு வாசு குழுவினர் தெரிவித்தனர். (உ-4)

## கொழும்புத்துறையில்

# யோசவாஸ் அடிகளுக்கு நினைவுச் சின்னம்

## வியாழன் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 21

கடந்த மாதம் முத்திப்பேறு அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட யோசவாஸ் அடிகளார், யாழ். மண்ணில் தனது காலை முதன் முதல் பதித்த இடமாகிய கொழும்புத்துறையில், அமைக்கப்பட்டு வரும் நினைவுச்சின்னம் நாளை மறுதினம் வியாழக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4-30 மணியளவில் கொழும்புத்துறை — புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். ஆயர் அருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் நினைவுச் சின்னத்தை திறந்து வைப்பதுடன், கூட்டுத்திருப்பலியையும் நிகழ்த்துவார்.

இவ்விழாவில் யாழ். மறைவட்ட மட்டத்திலான மாபெரும் நன்றி வழிபாடும் மற்றும் ''யோச வாஸ்'' நாட்டுக்கூத்து உட்பட பல சிறப்பு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் காலி முகத்திடலில் பல லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் வைத்து உலக கத்தோலிக்கர்களின் தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பர், யோசவாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு அளித்தது தெரிந்ததே (எ-5-14)

### வாக்குறுதிகளை--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிபந்தனைகளை விதிக்கவில்லை. அரச பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே கோரிக்கைகளை விடுத்துள்ளோம்.

★ தடை தளர்த்தப்பட்ட பொருள்கள் இங்கு போதிய அளவில் வந்து சேரவில்லை.

★ நாம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறுவதாக அரசும் இராணுவமும் கூறுவது தவறானதாகும்.

இராணுவத்தினராலேயே பல இடங்களில் ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது,

★ எரிபொருள் தடையை நீக்காது வேறு பொருள்கள் மீதான தடையை தளர்த்துவது, அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது என்பது அர்த்தமற்றதாகும்.

★ கண்காணிப்புக் குழுக்கள் செயற்படாமைக்கு அரசே முழுப்பொறுப்பாகும்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு எதிரான மோசமான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

இவற்றை நீக்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்ட ஓர் இணைப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னரே கண்காணிப்புக் குழுக்கள் செயற்பட முடியும் என்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தெரிவித்துவிட்டனர்.

நாம் ஆத்மபூர்வமாகவே இப்பேச்சுவார்த்தையில் இறங்கி இருக்கிறோம்.

மக்களுடைய முழுமையான அபிலாசைகளை நிறைவேறக்கூடிய தீர்வை அரசு முன்வைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடும் எதிர்பார்ப்புமாகும்.

(பேட்டியின் முழு விபரம் உதயனில் பின்னர் வெளிவரும்) (அ-4)

### கொம்பியூட்டர் கொள்வனவில் மோசடி

பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்கள் மற்றும் சில கொம்பியூட்டர் உபகரணங்களை கொள்வனவு செய்தமை தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவை இரகசியப் பொலீஸார் விரைவில் விசாரணைக்குட்படுத்த விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. (உ-எ)

### தபால்களை இன்று சேர்க்குக!

யாழ்ப்பாணம், பெப். 21

நாளை புதன்கிழமை பருத்தித்துறைக்கு வந்து திரும்பவுள்ள ''சி டான்ஸர்'' கப்பலில் வெளியூர் தபால் பொதிகள் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவாக இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு முன்னதாக யாழ் பிரதம தபாலகத்தினுள் இருக்கும் தபால் பெட்டியில் வெளியூர் தபால்களை சேர்க்குமாறு யாழ் பிரதம தபாலதிபர் திரு சு. கோடீஸ்வரன் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா பூரணம்

அல்லாய் மேற்கு திக்கத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா பூரணம் நேற்றுக் காலமானார்.

அன்னார் செல்லையாவின் மனைவியும். திருமதி ஜெ. ஜெயகௌரி (ஜேர்மன்), பிரபாகரன் (ஜேர்மன்), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் தாயாரும், செ. ஜெயபாலன், திருமதி பி அஜந்தி, திருமதி பா. சிவதாரிணி ஆகியோரின் மாமியாரும், ஜெ. அபிரா, சுலக்ஷன், சுஜேன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற மு. கணபதிப்பிள்ளை, திருமதி சு. சொர்ணலட்சுமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திக்கத்தில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக் கிரியைக்காக திக்கம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. செல்லையா
(கணவர்)

திக்கம். (சி-597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org